புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 19. TML1158 - சோளகர் தொட்டி நாவலில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள்; புனைவியலாக்கப்பட்ட எதார்த்த வாழ்வியல்

வீ.சூரஜ்,
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர், திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு.

**ஆய்வுச் சுருக்கம்**

பன்னெடுங்காலமாகவே தொன்று தொட்டு தங்களுக்கென்று ஒரு நிலப்பகுதியை தேர்ந்தெடுத்து வாழ்ந்து வருகின்றனர் இந்த பழங்குடி மக்கள். அவ்வாறான ஒரு பழங்குடி இனக்குழு சமூகம் தான் இந்த சோளக மக்கள். இவர்கள் வாழ்ந்த பகுதியில் உளவிய வீரப்பனை பிடிப்பதற்காக அங்குள்ள பெண்களுக்கு நடந்த பாலியல் சீண்டல்களையும். கொடுமைகளையும் பற்றிக் கூறுவதை இவ்வாய்வு ஆய்வுச் சுருக்கம் ஆகும்.

**முன்னுரை**

இந்தியாவில் பல்வேறு வகையான பழங்குடியின மக்கள் பல்வேறு இடங்களில் தங்களுக்கான வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். இந்தியாவில் உள்ள பழங்குடி சமூகங்களில் மிகப்பெரிய பழங்குடிச் சமூகம் மத்திய பிரதேசத்தில் உள்ளது. தமிழ்நாட்டில் மொத்தம் 37 வகையான பழங்குடியின மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அதில் ஒருவகைச் சமூகம் தான், இந்த சோளகர் இன மக்கள். இவர்கள் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் வனப்பகுதியில் தங்களின் வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். சோளகப் பெண்களுக்கு நேர்ந்த பிரச்சினைகளையும், சிக்கல்களையும் எடுத்துரைக்கும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றன.

**சோளகர் பெயர் காரணம்**

'சோளா' என்றால் காடு என பொருளாகும். காடுகளில் வாழ்வதால் இவர்களுக்கு சோளகர்' என்ற பெயர் வந்தது. வீரப்பன் உளவிய வனப்பகுதிகளில் ஒரு குழு வாழ்ந்து வந்தது. அவர்களே இந்தச் சோளகப் பழங்குடியின மக்கள் ஆவர். மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களாகிய இவர்கள் தங்களுக்கான எந்த ஒரு அடையாளமும் இல்லாமல் வாழ்ந்து வந்தார்கள்.

மனித இனம் என்பது பரிணாம வளர்ச்சியின் இறுதி நிலையாகும். ஆயினும், பல நிலைகளில் மாற்றங்களை ஏற்று வாழும் மனித சமூகத்தில் பழங்குடி மக்கள் நாகரீக உந்துதலுக்கு ஆட்படாமல் காடு சார்ந்த பொருட்களை சேகரித்து வேட்டை தொழில், மந்தை தொழில், இயற்கை விவசாயம் ஆகிய தொழில்களை மேற்கொண்டு வாழ்ந்து வருகின்றனர். மொழி, சூழல், வீடு, உணவு முறை, வைத்திய முறை, பழங்குடி பொருட்கள், பஞ்சாயத்து முறை, போன்றவை சார்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

**சோளகர் பண்பாடு**

சோழக மக்களிடையே இன்று வரையும் பல்வேறு வகையான சடங்குகள் காணப்படுகின்றன.

1. பிறப்புச் சடங்கு

2. பூப்புச் சடங்கு

3. திருமணச் சடங்கு

4. பிரசவச் சடங்கு

5. முகூர்த்த ஏற்கட்டுதல்

6. பால் கறக்கும் சடங்கு

7. இறப்புச் சடங்கு

*இவ்வாறான சடங்குகளையும் வாழும் இடங்களையும் கடவுள் வழிபாடுகளையும் காடுகளிலே அமைத்து வாழ்ந்து வந்தனர்.*

**அன்றைய காலத்தில் சோளகப் பெண்களின் நிலை**

*பழங்காலத்திலிருந்து தற்போது உள்ள சூழல் வரை பெண்களைத் தங்களின் உடல் பசியைத் தீர்த்துக் கொள்ள பயன்படுத்தும் ஒரு பொருளாக மட்டுமே ஆண்கள் நினைக்கின்றனர். இந்த மனநிலையில் தான் விசாரணை என்ற பெயரில் காவல்துறை அதிகாரிகள் தொட்டிப் பெண்களை அணுகினர். அப்போது மல்லி என்ற ஒரு பெண்ணை தன் கணவன் ஏதோ தவறு செய்திருப்பான் என்ற நோக்கில் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர். அவளை விசாரிக்கும் போது என் கணவன் எந்த தவறும் செய்யவில்லை என்று கூறினாள். நீ இப்படி எல்லாம் கேட்டால் கூற மாட்டாய் என்று .மல்லியை காவல்துறை அதிகாரிகள் பாலியல் சீண்டலுக்கு உட்படுத்தி கொடுமைப்படுத்தினார்கள்.*

*இன்றைய சமூகத்தில் ஒவ்வொரு பிரச்சனைகளுக்கும் மக்களே தீர்வு காணும் போது சமூகத்தில் இருக்கும் சில நபர்களால் மட்டுமே ஏதோ ஒரு பிரச்சனை உருவாகிக்கொண்டே உள்ளது. மேலும் தொட்டியில் வாழ்ந்த பெண்களுக்கான கொடுமைகளை அவர்கள் என்றும் மறக்க மாட்டார்கள். தவறு செய்தவர்களையும் தவறு செய்ய தூண்டியவர்களையும் பெண்களுக்கு ஏற்பட்ட கொடுமைகளை ஏராளம்.*

**பெண்களுக்கு நேர்ந்த வன் கொடுமைகள்**

*சோளக மக்கள் தங்களைத் துன்புறுத்தும் விலங்குகளை வேட்டையாடியும் விரட்டியும் வந்தனர். ஆனால் காவல்துறை அதிகாரிகள் தங்களை தாக்க வரும்போது எப்படி விரட்டுவது என்று தெரியாமல் நின்றனர், ஆண், பெண் என்றும் பாராமல் அதிகாரியால் துன்பத்திற்கு உள்ளாக்கப்பட்டனர் தொட்டி மக்கள். தொட்டியில் உள்ள பெண்களை நிர்வாணமாக்கியும் அவர்களின் மார்புகளில் மின்சாரம் கொடுத்தும் பெண்களைக் கொடுமைப்படுத்தினர். கர்ப்பிணி பெண்கள் என்றும் பாராமல் இந்த அதிகார திமிரினால் மிருகங்களைப் போன்று தங்களின் உடல் பசியைப் தீர்த்துக் கொண்டனர். பெண்களை பாலியல் ரீதியாக ஒடுக்கி அடிமைப்படுத்துவது கற்பனையில் எட்டாத அளவிற்கு அங்குள்ள தொட்டி பெண்களுக்கு ஏற்பட்டது. பெண்கள் மட்டும் இல்லாமல் சிறு சிறு குழந்தைகளின் கர்ப்பும் கூட சூறையாடப்பட்டது.*

**முடிவுரை**

*பெண்களுக்கு இரவு முழுவதும் பாலியல் தொல்லை நடந்ததாகவும். சித்திரவதை செய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டதாகவும் பலர் சொல்கின்றனர். பெண்களுக்கு நேர்ந்த தீமைகளையும் அவர்களின் உரிமைகளையும் காவல்துறையால் எவ்வாறு பறிக்கப்பட்டது என விளக்குகிறது. சமூகத்தில் பழங்குடியின பெண்களுக்கு ஏற்பட்ட சிக்கல்களையும் அவர்கள் எவ்வாறு பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டார்கள் என்பதை கட்டுரை மூலம் அறிந்து கொண்டேன். சோளகர் தொட்டி நாவலில் பெண்களுக்கு ஏற்பட்ட அடக்குமுறைகளை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது. தங்கள் அதிகாரத்தினை பயன்படுத்தி ஒரு சமூகத்தையே பாதிப்புக்கு உள்ளாக்கி இருக்கிறது இந்தக் காவல்துறை. ஒரு நாவலின் புனைவு உண்மையாக கூறப்படும் ஆனால் இந்நாவலில் உண்மை சம்பவத்தையே புனைவாக கூறப்பட்டுள்ளது.*

**துணைநூற் பட்டியல்**


1 பாலமுருகன் ச, சோளகர் தொட்டி, எதிர் வெளியீடு பதிப்பு, 2004
பொள்ளாச்சி, 642 002.

2. முனைவர் மரிய சூசை ச.ச, இந்திய பழங்குடிப் பண்பாடும் தமிழ் பண்பாடும்,
வி.பி .புக்பைண்டிங், முதற்பதிப்பு ,2007.

3. பக்தவத்சல பாரதி, தமிழக பழங்குடிகள், அடையாளம் வெளியீடு,முதற்பதிப்பு, 2018.